1994 ஏப்ரல் 30]

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

(மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைகள் பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 168 முதல் 172 வரையிலான 5 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94-ஆம் ஆண்டிற்கான உறுதி மொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

பேரவைத் தலைவரால் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டது பற்றியும், பேரவைத் தலைவர் ஒரு முன்னறிவிப்பினை அனுமதிக்காததற்கு முன்னரே எவரும் அதுகுறித்து வெளியிடக்கூடாது என்ற விதியை மீறியது பற்றியும் 'தினகரன்' நாளிதழ் மீதான உரிமைப்பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.

[1994 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற ‘தினகரன்’ நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“மேற்படி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229 (ஈ)-ன்படி இப்பேரவை இசைந்து ஏற்றுக் கொள்கிறது” என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

1994 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டு பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினை பற்றிய இந்தத் தீர்மானத்தின்படி திரு. ஆ. முத்துப்பாண்டியன் என்பவரை உடனடியாகக் கைது செய்து, ஒரு வார சாதாரண தண்டனை நிறைவேற்றுமாறு என்னுடைய வாரண்டை உடனடியாகக் காவல் துறைக்கு இப்பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994–95ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. கோரிக்கை எண் 23, கூட்டுறவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23—ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.58,15,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1666, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,15,05,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1705, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை காயிதே-மில்லத் மாவட்டம், திருவாரூர் வட்டம், மாங்குடி கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து திருக்கராவாசலில் அலுவலகம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS